This Page Intentionally
Left Blank



# அருணாசல ஸ்துதி பஞ்சகம்*



ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
2002

* பாடல்களுக்கு இடது பக்கமுள்ள பொருள் பாடல்களின் பொருளை உணரும் பொருட்டு ஒருவாறு குறிப்புரையாகவே கொடுக்கப்பட்டுள்ளது. முழுமையான விளக்கங்களை ஆச்ரம பதிப்புகளில் தக்கவாறு படித்துணர்தல் நலம்.



கருணைக் கடலாக அமர்ந்து, நினைத்த மாத்திரத்திலேயே முக்தியைத் தரக்கூடிய "அருணாசலம்" என்னும் சிவ சொரூபமே இந்த மலையாகும்.

## ஸ்ரீ அருணாசல தத்துவம்

புத்தியும் அகங்காரமும் எட்ட முடியாமல் கலங்கி துன்பமடைய ஓங்கி விரிந்து பரந்து நிற்கும் இதயம்தான் (ஆத்மாதான்) பிரம்மாவும் விஷ்ணுவும் அணுக முடியாமல் நிலைதடுமாற அவர்கள் மத்தியில், ஒளிமயமான அழலுருவாக எழுந்த அருணாசலத்தின் உண்மை, தத்துவமாகும்.

## தீபதர்சன தத்துவம்

இந்த சரீரமே நான் என்று நினைக்கும் மனதை (தேகாத்ம புத்தியை) நீக்கி, உள்முக திருஷ்டியால் இதயத்தில் நிலையாக ஒன்றி, ஏகசத்தாகிய உள் ஒளியின் உண்மை சொரூபத்தை உணர்வதே, பூமியின் இதய ஸ்தானமாகக் கூறப்படும் அருணாசல சிகரத்தில் விளங்கும் ஜோதியின் உண்மை தரிசனமாகும்.



ஸ்ரீ

# அருணாசல தத்துவம்

புத்தியகங் காரம் புலம்பெய்த வோங்கு
மத்தியித யந்தான் மறையவனு மாலு
நத்தவறி யாது நலங்குலைய வன்னார்
மத்தியொளி ரண்ணா மலையினது மெய்யே.

– ஸ்ரீ முருகனார்

# தீபதர்சன தத்துவம்

இத்தனுவே நானா மெனுமதியை நீத்தப்
புத்தியித யத்தே பொருந்தியக நோக்கா
லத்துவித மாமெய் யகச்சுடர்காண் கைபூ
மத்தியெனு மண்ணா மலைச்சுடர்காண் மெய்யே.

– ஸ்ரீ பகவான்

# ஸ்ரீ அருணாசல மாகாத்மியம்

1. புண்ணிய ஸ்தலங்களில் தலையாயது அருணாசலமே. மற்றெல்லா ஸ்தலங்களைக் காட்டிலும் மகிமை மிகுந்ததுவும் அதுவே. அது பூமியின் இதயமும் ஈச்வரனின் இதய ஸ்தலமுமாகும். அது ரகசியம் நிறைந்த ஸ்தலம். அந்த ஸ்தலத்திலே தேஜோமய அருணாசல மலையாக அது விளங்குகிறது.

2. தொன்மை வாய்ந்த இந்த அருணாசலம் அற்புத தேஜோ லிங்கமாக தோன்றிய புனிதத் திருநாள் மார்கழி மாத திருவாதிரை நன்னாளாகும். அப்படி ஜோதி சொரூபமாக எழுந்தருளிய இறைவனை விஷ்ணு, பிரம்மா முதலான தேவர்கள் யாவரும் வழிபட்டு வணங்கிய நாள், மாசி மாதம் சிவராத்திரி நள்ளிரவாகும்.

3. ''அருணாசல க்ஷேத்திரத்தில் யாம் அக்னி மூர்த்தமாக எழுந்தருளி இருப்பினும், அதை மறைத்து சாந்தமலையாக நிலைபெற்று ஒளிர்வது, எமது அருளால் உலகனைத்தையும் ரக்ஷிக்கும் பொருட்டேயாகும். மேலும் அருணகிரியோகியென சித்தவடிவத்தில் நான் என்றென்றும் இந்த மலையின்கண் வீற்றிருப்பேன். எமது இம்மலைவடிவின் உள்ளே சகல ஐசுவரியங்களும் ஒளிரும் மிக 'அதிசயமான குகை' என்றும் உள்ளது.''

4. எத்தனை உலகங்கள் உள்ளனவோ அத்தனையும் பந்தமேயாகும். ஜனன மரண துக்கத்தைத் தரக்கூடிய கொடிய கர்மங்களே பந்தத்திற்குக் காரணமாகும். பந்தத்திற்கு இருப்பிடமாகிய இந்த பொல்லா வினைகள் யாவும் எதனுடைய தரிசன மாத்திரத்தால், இல்லாது அழிந்து நாசமடையுமோ அதுதான் ஒளிமயமாக விளங்கும் இந்த அருணாசலமாகும்.



ஸ்ரீ

# அருணாசல மாகாத்மியம்

## நந்திவாக்கு:-

(விருத்தம்)

*1.* *அதுவேதல மருணாசலந் தலம்யாவிலு மதிக*
*மதுபூமியி னிதயம்மறி யதுவேசிவ னிதயப்*
*பதியாமொரு மருமத்தலம் பதியாமவ னதிலே*
*வதிவாஞெளி மலையாநித மருணாசல மெனவே.*

(வெண்பா)

*2.* *ஆதியரு ணாசலப்பே ரற்புதலிங் கத்துருக்கொ*
*ளாதிநாண் மார்கழியி லாதிரையச் — சோதியெழு*
*மீசனைமான் முன்னமர ரேத்திவழி பட்டநாண்*
*மாசிசிவ ராத்திரியா மற்று.*

## சிவவசனம்:-

(விருத்தம்)

*3.* *அங்கியுரு வாயுமொளி மங்குகிரி யாகத்*
*தங்கலரு ளாலுலகந் தாங்குவதற் கன்றி*
*யிங்குறைவன் சித்தனென வென்றுமென துள்ளே*
*பொங்கியொளி ருங்குகைபல் போகமொடென் றுள்ளே.*

(வேறு)

*4.* *எல்லா வுலகுந் தகையவ் வியலாற்*
*பொல்லா வினைகள் ருணமாம்** புகலீ*
*தில்லா ததுவா மெதுகண் ணுறலா*
*லெல்லா ரருண சலமா மிதுவே.*

5*. அருணாசலத்தைக் காணக்கூடிய எல்லையிலிருந்து, ஊனக் கண்ணால் தரிசித்தாலும் அல்லது வெகு தூரத்திற்கு அப்பாலிருந்து மனத்தினால் ஸ்மரித்தாலும்கூட, சாதன சதுஷ்டயங்கள் அப்யசித்து சிரமப்பட்டு முயற்சித்தாலன்றி உணர முடியாத அரிய மெய்யறிவினை (சொரூப ஞானத்தை) யாவரும் அடையலாம்.

6. அருணாசல க்ஷேத்திரத்தைச் சுற்றியுள்ள இருபத்து நான்கு மைல் பரப்பளவிற்குள் இருக்கும் பிரதேசத்தில் வசிப்பவர்கள் அகந்தையை ஒழிப்பதற்கு, எந்தவித சம்பிரதாய தீக்ஷைகள் பெற்றுக் கொள்ளாவிடினும், பாசமற்றதான என்னுடைய சிவ சாயுச்சியப் பதவியை அடைவர். இது சர்வேச்வரனாகிய எனது கட்டளையாகும்.

7. அறநெறிவழுவாதவர்களுக்கும் பக்திமான்களுக்கும் புகலிடமாக விளங்குவது இந்த அருணாசல க்ஷேத்திரம். இங்கு பிறருக்கு தீங்கு செய்ய நினைக்கும் துஷ்டர்கள், பல கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டு கெட்டழிவர். இத்தலத்தில் அசுரபலமெல்லாம் வீரியமிழந்துவிடும். ஆகையால் அழலுருவான அருணாசலேசனின் கோபாக்னியில் விழுந்து அழியாதே.**

(வேறு)

5. உருத்தெரி யெல்லை யுற்றுகண் ணுற்றுற்
கருத்தினுற் றூரக் கருதினு லும்மே
வருத்த முறாது வராதவே தாந்த
வருத்தவிஞ் ஞான மார்க்குமுண் டாமே.

6. யோசனை மூன்று மித்தல வாசர்க்
காசறு தீக்கை யாதியின் றியுமென்
பாசமில் சாயுச் சியம்பயக் கும்மே
யீசனு மென்ற னாணையி னானே.

### தேவியுரை:-

(வேறு)

7. என்றுமே யறவோ ரன்பர்க்
கிருப்பிட மித்த லந்தான்
பொன்றுவார் பிறர்க்கின் னாவுன்
புன்மையர் பன்னோய் துன்னி
யொன்றுறா தொழியுந் தீயோ
ருரனொரு கணத்திங் கங்கிக்
குன்றுரு வருணை யீசன்
கோபவெந் தழல்வி ழாதே.

---

* பாடல் 5, 6 இரண்டும் அருணாசல மாகாத்மிய வடமொழி சுலோகங்களின் மொழிபெயர்ப்பாகும். இவை தோன்றிய வரலாற்றினை குஞ்சு சுவாமிகளின் "எனது நினைவுகள்" புத்தகத்தில் "தீக்ஷை முயற்சி" என்ற அத்தியாயத்தில் காணலாம்.

** இந்த அறிவுரையை மஹிஷாசுரனுக்கு அறிவிக்கும் பொருட்டு பார்வதி தேவியானவர் கபில முனிவர் மூலமாக விடுத்தார். அப்படி விடுத்த பத்து சுலோகங்களில் மேலே உள்ள ஒன்று மட்டும் பகவானால் மொழி பெயர்க்கப்பட்டது.